DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 3/2018**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சித்ரா | Caste: | |
| Husband Name: | தெய்வேந்திரன் | Calling: | சூப்பர் மார்க்கெட்டில் விற்பனே உதவியாளர், இராமநாதபுரம் |
| Village: | சித்தார்கோட்டை | Religion: | |
| Taluk: | இராமநாதபுரம் | Age: | 41 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 04.07.2025

( 2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 1ம் எதிரி இறந்துவிட்டார். )

**முதன்மை விசாரணை**

நான் இராமநாதபுரம் தாலுகா சித்தார்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். இராமநாதபுரத்தில் உள்ள ஸ்ரீ பார்வதி சூப்பர் மார்கெட்டில் விற்பனை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன பாண்டி எனக்கு என்ன உறவு என்றால் நான் அவருடன் சேர்ந்து வாழ்ந்தேன். கடந்த 2017ம் ஆண்டு எங்கிருந்தேன் என்றால் கீழக்கரையில். கீழக்கரையில் எங்கு என்றால் ஞாபகமில்லை. ஆஜர் எதிரியை தெரியாது. இவ்வழக்கில் 1ம் எதிரியான இறந்துபோன லெட்சுமணன் மகன் தெய்வேந்திரனை தெரியுமா என்றால் அவர் என் கணவர். சாட்சி அஞ்சலாதேவி என் சின்னம்மா. சாட்சி ரிஷாந்தினி என் அண்ணன் மகள். 1ம் எதிரியான தெய்வேந்திரனுக்கும் எனக்கும் எப்பொழுது திருமணம் ஆனது என்றால் 2004ம் வருடம். எனக்கும் என் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் வழக்கில் இறந்துபோன பாண்டியோடு சுமார் 6 மாத காலம் சேர்ந்து வாழ்ந்தேன். இறந்துபோன

பாண்டி எப்படி இறந்தார் என்றால் அவர்மீது மண்ணெண்ணெய் ஊற்றி எரித்தார்கள் என்று கேள்விப்பட்டேன். எவ்வளவு காலத்திற்கு முன்பு என்றால் ஞாபகமில்லை. யார் எரித்தது என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் நீதிபதியிடம் வாக்குமூலம் அளித்தேனா என்றால் பரமக்குடியில் உள்ள நீதிபதியிடம் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் குவிமுச 164ன் கீழ் அளித்த வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அதில் உள்ள கையெழுத்துகள் மட்டும் **அ.சா.ஆ.1.** நான் பரமக்குடியில் உள்ள நீதிபதியிடம் சொன்ன விஷயங்கள் உண்மையா என்றால் அவ்வாறு சொல்லும்படி கீழக்கரை போலிசார் எனக்கு சொன்னார்கள். இந்த வழக்கில் இறந்துபோன பாண்டி என்ன சாதி என்றால் பட்டியல் இனத்தை சேர்ந்த சமூகத்தை சேர்ந்தவர் என்பது தெரியும். நானும் 1ம் எதிரி தெய்வேந்திரனும் தேவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

என் கணவர் தெய்வேந்திரன் மீது பல கொலை கொள்ளை வழக்குகள் இருந்தன என்றால் சரிதான். அதனால் அவர் நீதிமன்றங்களுக்கு சென்றுவருவார் என்றால் சரிதான். என் கணவர் குடித்துவிட்டு வந்து என்னுடன் சண்டை போடுவார் என்றால் சரிதான். நானும் என் கணவரும் கொஞ்சகாலம் தர்கா வலசை கிராமத்தில் குடியிருந்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் எங்கள் வீட்டிற்கு

அருகில் திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டியை சேர்ந்த இறந்துபோன பாண்டி வசித்து வந்தார் என்றால் சரிதான். என் கணவர் என்னுடன் அடிக்கடி சண்டை போட்டு வந்ததால் எனக்கும் இறந்துபோன பாண்டிக்கும் தொடர்பு ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் என் கணவர் என்னையையும் பாண்டியையும் கண்டித்தார் என்றால் சரிதான். அதனால் நானும் பாண்டியும் தர்காவலசையில் இருந்து ஓடிப்போய் கோவிலில் தாலி கட்டி திண்டுக்கலில் வாழ்ந்துவந்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு கீழக்கரை தாலுகா காஞ்சிரங்குடி செங்கல் நீரோடையில் உள்ள மூர் டிராவல்ஸ்க்கு சொந்தமான தோப்பில் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். 12.05.2017 க்கு ஒரு வாரத்திற்கு முன்பு என் கணவர் தெய்வேந்திரன் நானும் பாண்டியும் வாழ்ந்து வந்த தோப்பிற்கு வந்து என்னிடம் தகராறு செய்தார் என்றால் சரிதான். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் சத்தம் போட்டதால் என் கணவர் போய்விட்டார் என்றால் சரிதான். அதனால் அங்கிருந்து கிளம்பி கீழக்கரையிலிருந்து முள்ளுவாடி செல்லும் ரோட்டில் மௌலானா என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் என் சித்தப்பா மகனான அண்ணன் அசோக்குமார் வேலை பார்த்து வந்த இடத்தில் நானும் பாண்டியும் அடைக்கலம் ஆனோம் என்றால் சரிதான். 12.05.2017 ம் தேதி நானும் பாண்டியும் மேற்படி தோட்டத்தில் அசோக்குமார் குடிசை வீட்டிற்கு முன்பு உள்ள இடத்தில் மணலில் போர்வையை விரித்து படுத்திருந்தோம் என்றால் நான் உள்ளே படுத்திருந்தேன், பாண்டி வெளியே படுத்திருந்தார். அந்த சமயத்தில் அசோக்குமாரின் சித்தி அஞ்சலாதேவியும், அசோக்குமாரின் குழந்தைகளும் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். அன்று இரவு 2.00 மணியளவில் வெளியில் படுத்திருந்த பாண்டியின் அலறல் சத்தம் கேட்டது என்றால் சரிதான்.

குடிசை வீட்டு முன்பு உள்ள கம்பத்தில் விளக்கு எரிந்துகொண்டிருந்ததால் வெளிச்சம் இருந்தது என்றால் சரிதான். அதனால் பாண்டி படுத்திருந்த இடத்தில் நடக்கும் விசயங்களை வீட்டிற்குள் இருந்து பார்க்க முடியும் என்றால் சரிதான். வெளிச்சம் இருந்ததால் வெளியில் நடக்கும் விசயங்கள் தெரியும் என்றால் சரிதான். பாண்டியின் அலறல் சத்தம் கேட்டவுடன் நான் வெளியில் வந்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் பார்க்கும்போது என் கணவர் தெய்வேந்திரன் பாண்டியின் கழுத்தில் காலை வைத்து எந்திரிக்க விடாமல் மிதித்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல, ஆனால் என் கணவர் ஓடும்போது பார்த்தேன். என் கணவர் பாண்டியின் கழுத்தில் காலை வைத்து எழுந்திரிக்க விடாமல் மிதித்துகொண்டிருந்ததை நான் பார்த்தேன் என்றும் தற்போது இல்லை என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அப்போது என் கணவர் தெய்வேந்திரன் பாட்டிலில் இருந்த மண்ணெண்ணெயை பாண்டி மீது ஊற்றினார் என்றும், அதையும் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் அதை பார்த்துவிட்டு தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றல் சரியல்ல. அப்போது இன்னொருவர் பாண்டியின் வாயை பொத்திக்கொண்டு கையில் கம்பியுடன் இருந்தார் என்றும், அதையும் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. பாண்டியின் வாயை பொத்திக்கொண்டு கையில் கம்பியுடன் இருந்தவர் என் கணவரின் நண்பரான நீதிமன்றத்தில் உள்ள ராஜா என்ற ஊசி மண்டையன் என்பது எனக்கு நன்கு தெரியும் என்றும் ஆஜர் எதிரியை சம்பவத்திற்கு முன்பே எனக்கு தெரியும் என்றும் சொன்னால் அவ்வாறு போலிசார் சொல்ல சொன்னார்கள். பாண்டி திமிறி எழுந்திருக்கும்போது என் கணவர் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குச்சியை பற்றவைத்து போட்டுவிட்டார்

என்றும் அதையும் நான் பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் அத்துடன் தேவுடியா பயலே உனக்கு மறவ வீட்டு பொன்னு கேட்டுகுதாடா இத்தோடு செத்து தொலடா என்று சொல்லி பேசினார் என்றும் அதையும் நான் கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அப்படி பேசிகொண்டு ஆஜர் எதிரியிடம் இருந்த கம்பியை வாங்கி என்னையும் அடிக்க பாய்ந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அப்போது ஆஜர் எதிரி பொம்பளயை அடிக்க வேண்டாம் என்று சொல்லி தடுத்து என் கணவர் தெய்வேந்திரனை கூட்டி சென்றுவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. என் சித்தி அஞ்சலா தேவி, அசோக்குமாரின் குழந்தைகளான ரிஷாந்தினி, ரீத்தா ஆகியோர்கள் சத்தம் கேட்டு வந்தார்கள் என்றும் அவர்கள் சத்தம் போட்டவுடன் என் கணவரும் ஆஜர் எதிரியும் கம்பியுடனும் பாட்டிலுடனும் ஓடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. பாண்டியின் உடல் முழுவதும் தீப்பற்றி அவர் வலிதாங்கமுடியாமல் அலறினார் என்றால் இல்லை. அப்போது நான் அஞ்சலாதேவி, ரிஷாந்தினி, ரீத்தா ஆகியோர்கள் தண்ணீர் ஊற்றி அணைத்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் சரிதான். கடந்த 12.05.2017ம் தேதி காலை 8.40 மணியளவில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி விவரங்களை 12.05.2017ம் தேதி டிஎஸ்பி என்னை விசாரிக்கும்போது கூறிவிட்டு ஆஜர் எதிரி என் கணவரின் நண்பர் என்பதாலும் பாண்டி இறந்துவிட்டதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று யாராவது என் வாயை பொத்தினார்களா என்றால் இல்லை. கம்பியை வைத்து தாக்க வந்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளன்று தெய்வேந்திரனை மட்டும்தான் நான் பார்த்தேன் என்றால் சரிதான். வேறு யாரையும் நான் பார்க்கவில்லை.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)